<u>2026 ஜூன் மாதம் 25– ஆம் தேதி வியாழக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 32/2021</u>

2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.டி.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW9 (LW7) – முருகேசன் |
| தகப்பனார் பெயர்: | பெரியசாமி |
| ஊர்: | இ.பெருமாள்பட்டி |
| வட்டம்: | பேரையூர் |
| மாவட்டம்: | மதுரை |
| தொழில்: | அரசு பேருந்து நடத்துநர் |
| வயது : | 52 |

25.06.2026

(1, 2, 9 எதிரிகள் ஆஜர். 3 முதல் 8 வரையிலான எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் 5 முதல் 8 எதிரிகளின் அடையாளத்தை மறுக்கவில்லை என்று 5 முதல் 8 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 355 BNSS மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட காவலர் திரு.வேல்முருகன், தலைமை காவலர் எண்.287 அவர்களால் அடையாளம் காணப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் மதுரை மாவட்டம், பேரையூர் தாலுகா, இ.பெருமாள்பட்டியில் வசித்து வருகிறேன். நான் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் நடத்துநராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு எனது மைத்துனர்

செல்லப்பாண்டியனை அவரது மாமனார் மகாராஜன், அவரது மகன் தெய்வேந்திரன் அவர்கள் சேர்ந்து ஆள் வைத்து மருமகன் செல்லப்பாண்டியனை வெட்டிக் கொன்றதாகவும், 1ம் எதிரி மகாராஜன் மயிலாடும்பாறை கிராம நிர்வாக அலுவலர் முன்பு சரணடைந்ததாக எனது மைத்துனர் ராமராஜ் என்பவருக்கு மயிலாடும்பாறை காவல் ஆய்வாளர் தகவல் சொன்னதாக என்னை ராமராஜ் என்பவர் அலைபேசியில் தொடர்பு கொண்டு சொன்னார்.

2. ராமராஜ் எனக்கு 29.02.2020ம் தேதி காலை சுமார் 6 மணியளவில் அலைபேசியில் அழைத்து மேற்சொன்ன தகவலை கூறினார். எனது பெரிய மைத்துனர் ராமராஜ், அவரது மனைவி ஜோதி, எனது பெரிய சகளை ராஜேந்திரன், அவரது மனைவி கங்காதேவி, மற்றொரு சகளை சங்கரபாலு, அவரது மனைவி ஈஸ்வரி மற்றும் உறவினர்கள் அனைவரும் 25 நபர்கள் அமரும் அளவுள்ள வேனில் கடமலைக்குண்டுவிலிருந்து வந்தார்கள். நானும், எனது மனைவி செல்வியும் உசிலம்பட்டியில் அந்த வேனில் ஏறி ராமநாதபுரம் சென்றோம். நாங்கள் ராமநாதபுரம் உச்சிப்புளிக்கு வரும்படி காவல் ஆய்வாளர் எங்களிடம் சொன்னார்.

3. உச்சிப்புளியிலிருந்து சுமார் 1 கி.மீ. காவல் ஆய்வாளர் மற்றும் நாங்கள் கடற்கரை ஓரமாக நடந்து சென்றோம், அங்கு பனங்காடுகளாக இருந்தன. 7 வது எதிரி கிஷோர், 5 வது எதிரி செந்தில், 6 வது எதிரி அன்புகணேஷ் மற்றும் 8 வது எதிரி நாகராஜ் ஆகியோர்களை காவல் ஆய்வாளர் அந்த கடற்கரை ஓரமாக இடத்திற்கு அழைத்து வந்தார். 7 வது எதிரி கிஷோர் சம்பவ இடத்தை காண்பித்து எனது மைத்துனர் செல்லப்பாண்டியனை அவரது மாமனார் 1வது எதிரி மகாராஜன் மற்றும் 2வது எதிரி தெய்வேந்திரன் ஆகியோர்கள் சொன்னதின்பேரில் செல்லப்பாண்டியனை வெட்டி அந்த இடத்தில் புதைத்ததாக காவல் ஆய்வாளரிடம் இடத்தை காண்பித்து கூறினார்.

4. அந்த இடத்தில் கிராம நிர்வாக அலுவலர், தாசில்தார் மற்றும் மருத்துவர் வந்திருந்தார்கள். 7 வது எதிரி கிஷோர் காண்பித்த இடத்தை தாசில்தார் தோண்ட சொன்னார். ஜே.சி.பி வைத்து அந்த 7 வது எதிரி காண்பித்த இடத்தை தோண்டினார்கள். தோண்டிய இடத்திலிருந்து சதையுள்ள அழுகிய உடல் எடுக்கப்பட்டது. மருத்துவர் தோண்டி எடுக்கப்பட்ட பிணத்திலிருந்து சிறு பகுதியை வெட்டி எடுத்துக் கொண்டார்கள். சம்பிரதாயப்படி எங்களிடம் எரிக்க ஒரு பகுதியை கொடுத்தார்கள். எனது மனைவி மற்றும் உறவினர்கள் அழுதார்கள். மற்ற எதிரிகளை கைது செய்ய உள்ளதாக காவல் ஆய்வாளர் எங்களிடம் கூறினார். எங்களை காவல் ஆய்வாளர் கடற்கரை ஓரமாக உள்ள பள்ளிவாசல் வழியாக அழைத்துச் சென்றார்கள்.

5. காங்கேயத்தை சேர்ந்த சக்திவேல் என்பவர் செல்லப்பாண்டியனின் ஒன்றுவிட்ட முறையில் சகளை ஆவார். அவர் கடமலைக்குண்டுவிலிருந்து செல்லப்பாண்டியனை உச்சிப்புளிக்கு அழைத்துச் சென்றார். 7 வது எதிரி கிஷோர், 5 வது எதிரி செந்தில், 6 வது எதிரி அன்புகணேஷ் மற்றும் 8 வது எதிரி நாகராஜ் ஆகிய எதிரிகளை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**1, 2 மற்றும் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**</u>

6. எனது பெரிய மைத்துனர் ராமராஜ், அவரது மனைவி ஜோதி, எனது பெரிய சகளை ராஜேந்திரன், அவரது மனைவி கங்காதேவி, மற்றொரு சகளை சங்கரபாலு, அவரது மனைவி ஈஸ்வரி மற்றும் உறவினர்கள் அனைவரும் 25 நபர்கள் அமரும் அளவுள்ள வேனில் கடமலைக்குண்டுவிலிருந்து வந்தார்கள் என்றும், நானும், எனது மனைவி செல்வியும் உசிலம்பட்டியில் அந்த வேனில் ஏறி ராமநாதபுரம் சென்றோம் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். இ.பெருமாள்பட்டி உசிலம்பட்டியிலிருந்து எவ்வளவு தூரம் என்றால் சுமார் 18 கி.மீ. தூரம் ஆகும்.

7. நானும், எனது மனைவியும் இ.பெருமாள்பட்டியில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். நான் எந்த கிளையில் அரசு பேருந்து நடத்துநராக பணியாற்றி வருகிறேன் என்றால் உசிலம்பட்டியிலுள்ள கிளையில் நடத்துநராக பணியாற்றி வருகிறேன். நாளொன்றுக்கு எனக்கு வேலை நேரம் என்ன என்றால் சுமார் 8 மணி நேரம் ஆகும். பொதுவாக மூன்று ஷிப்ட்டுகளாக வேலை நடக்கும் என்றால் ஒவ்வொரு நபருக்கும் ஒரு ஷிப்ட்டாக மாறி மாறி வேலை செய்வார்கள். 29.02.2020, 08.08.2019 ஆகிய தேதிகளில் நான் எந்த ஷிப்ட்டில் வேலை செய்தேன் என்று என்னால் சொல்ல முடியுமா என்றால் 29.02.2020ம் தேதியன்று நான் விடுப்பில் இருந்தேன், 08.08.2019ம் தேதி ஞாபகமில்லை. விடுப்பு எடுக்க வேண்டும் என்றால் கிளை மேலாளருக்கு விண்ணப்பம் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான்.

8. 29.02.2020ம் தேதி நான் விடுப்பில் இருந்தேன் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. இ.பெருமாள்பட்டியிலிருந்து, உசிலம்பட்டி வந்து, கடமலைக்குண்டுவிற்கு செல்ல வேண்டும் என்றால் சரிதான். உசிலம்பட்டிக்கும், கடமலைக்குண்டுவிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 30 கி.மீ தூரத்திற்கும் மேல் இருக்கும். எதிரிகளின் பெயர்கள் போலீசார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்சொன்ன எதிரிகளை காவல் ஆய்வாளர் அடையாளம் காட்டினார் என்றால் சரிதான். 29.02.2020ம் தேதிக்கு பின்னர் எதிரிகளை எவ்வளவு நாட்கள் கழித்து நீதிமன்றத்தில் வைத்து பார்த்தேன் என்றால் 3 வருடங்கள் கழித்து நான் எனது மனைவியுடன் நீதிமன்றத்திற்கு வந்த சமயத்தில் எதிரிகளை பார்த்தேன். போலீசார் எதிரிகளை குறிப்பிட்டு காட்டி அடையாளம் காட்டினார்களாக என்றால் இல்லை.

9. 29.02.2020ம் தேதி நான் பார்த்த எதிரிகளின் நிறம், வயது, பருமன் ஆகிய தோற்றங்கள் குறித்து அடையாளங்களை போலீசாரிடம் கூறினேனா என்றால் இல்லை. இடது கால், இடது கை, தலை இல்லாமல் எலும்புக்கூடாக

இருந்தது என்றால் சரியல்ல, அழுகிய நிலையில் இருந்தது. மேற்சொன்னவாறு போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை. உச்சிப்புளி பேருந்து நிலையத்தில் இறங்கினோமா என்றால் இல்லை, வேன் எவ்வளவு தூரம் சென்றதோ, அவ்வளவு தூரம் சென்றோம், அதன் பின்பு நடந்து சென்றோம், பள்ளிவாசல் அருகில் இறங்கினோம். பெரிய பள்ளிவாசல் என்றால் சுமாரான பள்ளிவாசல் ஆகும். அந்த பள்ளிவாசலில் எப்போதும் ஓதுபவர்கள் இருப்பார்கள் என்றால் நான் பார்க்கவில்லை. பள்ளிவாசலில் ஆட்கள் இருந்தார்களா என்றால் இரண்டு நபர்கள் இருந்தார்கள்.

10. பள்ளிவாசலில் இருந்த நபர்களை போலீசார் எங்களுடன் பிணம் இருந்த இடத்திற்கு அழைத்து வந்தார்களா என்றால் தெரியவில்லை. நான் சொல்வதுபோல் உச்சிப்புளிக்கு நானோ, என்னுடன் வந்த ஆட்களோ செல்லவில்லை என்றால் சரியல்ல, நாங்கள் அனைவரும் உச்சிப்புளிக்கு சென்று நேரடியாக அந்த பிணத்தை பார்த்தோம். நாங்கள் பார்த்த எலும்புக்கூடு அடையாளம் தெரியாத நிலையில் இருந்தது என்றால் சரியல்ல, சதையுடன் கூடிய அழுகிய நிலையில் அடையாளம் தெரியாமல் இருந்தது. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், அந்த பிணத்தை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. போலீசார் சொல்லி கொடுத்தப்படி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

11. ராமராஜ் எனக்கு அலைபேசியில் காவல் ஆய்வாளர் சொன்னதாக சொன்ன தகவலை வைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் உச்சிப்புளிக்கு சென்று பார்த்ததை சொல்கிறேன். உச்சிப்புளிக்கு சென்று பார்த்த சம்பவத்தை தவிர்த்து, செல்லப்பாண்டியன் எப்படி கொல்லப்பட்டார் என்ற விபரத்தை காவல் ஆய்வாளர் ராமராஜிடம் சொல்லி, ராமராஜ் என்னிடம் சொன்னார் என்றால் சரிதான். 3 வது எதிரி சக்திவேலை உச்சிபுளியில் வைத்து நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். சக்திவேலை செல்லப்பாண்டியன்

அழைத்து சென்றதாக காவல் ஆய்வாளர் சொன்னதை வைத்து தெரியும் என்றால் சரிதான்.

12. செல்லப்பாண்டியனின் சகளை சக்திவேல் என்றால் எனது மைத்துனர் மனைவி சித்ரா வழியில் உறவுமுறை ஆவார். காவல்துறையினர் சொல்லிக்கொடுத்து எதிரிகள் மீது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்தவர் எனக்கு நெருங்கிய உறவினர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>5 முதல் 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

13. நான் உச்சிபுளிக்கு செல்லவில்லை என்றாலும், 7 வது எதிரி கிஷோர் உச்சிபுளிக்கு வரவும் இல்லை, அவரை நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல, நான் நேரடியாக உச்சிபுளிக்கு சென்று பார்த்தேன், அங்கு 7 வது எதிரி கிஷோர், அன்புகணேஷ், செந்தில், நாகராஜ் ஆகியோர்களை போலீசார் அழைத்து வந்தார்கள், அங்கு வைத்து நான் பார்த்தேன். அந்த எதிரிகளை நான் பார்க்காமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, நான் பார்த்தேன். காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

14. 1 முதல் 3, 5 முதல் 9 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை அப்படியே ஏற்றுக்கொள்கிறார்.

<u>மறு விசாரணை</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.06.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.06.25 18:01:38 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.06.2026